சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி எஸ்.புதூர் பாரி வள்ளல் ஒன்றியத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, மாவட்ட திட்ட அலுவலர் மரு.அரவிந்த் மற்றும் அரசு அலுவலகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களுக்கு கூட்டு குடிநீர் வினியோகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்ற ஜீ. வி.மார்க்கண்டேயன் தலைமையில் நடைபெற்றது. உடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, நவநீதக்கண்ணன், காசி விஸ்வநாதன், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், எட்டையாபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி கலந்து கொண்டனர்.

இந்தியா முழுவதும் உயர்நீதிமன்றங்களில் 330 பணியிடங்கள் காலி!

சமூகநீதி, பாலியல் நீதி அடிப்படையில் நீதிபதிகள் நியமனம் அவசியம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.12-

இந்திய அளவில் உயர்நீதிமன்றங்களில் 330 நீதிபதி பதவிகள் காலியாக உள்ளன. இதனால் 67 லட்சம் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. தாமதிக்கப்பட்ட நீதிபதி மறுக்கப்பட்ட நீதி என்று தெரிந்திருந்தும் இந்த நிலை நீடிக்கிறது. ஒன்றிய ஆளும் அரசு - முடிவெடுப்பதில் தாமதம் செய்வதே இதற்குக் காரணம்! சமூகநீதி அடிப்படையில் நீதிபதி நியமனங்கள் அவசியம்; இதற்கு சமூகநீதியாளர்கள் ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை உள்பட 23 உயர்நீதி மன்றங்களில் 330 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ள அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

உயர்நீதிமன்றம்

டில்லி, சென்னை, மும்பை, கொல்கத்தா, அலகாபாத், கருநாடகா, கேரளா, குஜராத், கவுகாத்தி, மத்தியப் பிரதேசம், மேகாலயா, ராஜஸ்தான், திரிபுரா, பஞ்சாப் மற்றும் அரியானா உள்பட நாடு முழுவதும் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளன. இந்த உயர்நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை 1,122 ஆகும்.

இதில் 792 நீதிபதிகள் மட்டுமே இப்போது பணியாற்றுகிறார்கள். 161 நிரந்தர நீதிபதிகள், 169 கூடுதல் நீதிபதிகள் என 330 நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை உயர்நீதிமன்றங்களில் காலி யாக இருக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி இருக்கிறது. அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் 160 நீதிபதி பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் 76 பணியிடங்கள் நிரப்பப்படா மல் காலியாக உள்ளன.

பணியிடங்கள் காலி

மும்பை உயர்நீதிமன்றத்தில் 94 நீதிபதி பணி யிடங்கள் உள்ள நிலையில், 26 நீதிபதி பணியிடங் களும், பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதி மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 85 நீதிபதி பணியிடங்களில் 25 நீதிபதி பணியிடங்களும், கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் உள்ள 72 நீதிபதி பணியிடங்களில் 24 நீதிபதி பணியிடங்களும், சென்னை உயர் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்

பட்ட 75 பணியிடங் களில் 19 பணியிடங்களும் காலியாக இருக்கின்றன.

எமது அருமை தூய்மைப் பணியாளர் சகோதர, சகோதரிகளுக்கு உரிமையுடன் அன்பு வேண்டுகோள்!

தாம்பரம் பெரியார் வாசகர் வட்டம் 3ஆவது கூட்டம் தலா 3 நீதிபதிகளை கொண்ட சிக்கிம் மற்றும் மேகாலயா உயர்நீதிமன்றங்களில் மட்டும் அனுமதிக் கப்பட்டுள்ள பணியிடங்களில் நீதிபதிகள் பணியாற்றி வருகின்றனர். மீதம் உள்ள உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதால் வழக்குகள் தீர்வை எட்ட முடியாமல் இழுத்துக் கொண்டே செல்லும் நிலை இருக்கிறது.

காரணம் என்ன?

நீதிபதிகளை 'கொலிஜியம்' என்ற அமைப்பு தேர்வு செய்து வருகிறது. நீதிபதிகளை நியமனம் செய்வதற்கான ஒப்புதலை அரசிடம் இருந்து, 'கொலிஜியம்' அமைப்புப் பெறுவதில் ஏற்படும் நடைமுறை தாமதம்தான் சென்னை உள்பட 23 உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதற்கு காரணமாகக் கூறப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 67 லட்சத்திற்கும் அதிகம்!

"தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி" என்பதை ஆளும் ஒன்றிய அரசில் உள்ளவர்களும், 'கொலிஜியம்' என்ற நீதிபதிகள் பணியிடங் களுக்குப் பரிந்துரைக்கும் மூத்த நீதிபதிகளும் அறியாதவர்களா?

"நீதிபதிகளை நியமனம் செய்வதற்கான ஒப்புதலை ஒன்றிய சட்ட அமைச்சகம் மற்றும் உரிய அமைப்பு முறை அதிகார மய்யங்களிடமிருந்துப் பெறுவதில் ஏற்படும் நடைமுறைத் தாமதம்தான் சென்னை உயர்நீதி மன்றம் உள்பட 23 உயர்நீதிமன்றங்களில் நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதற்கு மூல காரணம்!

நீதித்துறைதான், ஜனநாயக ஆட்சியில் மக்களின் ஒரே கடைசி நம்பிக்கை!

இதன் நிலை இப்படி இருப்பதற்கு உரிய மூலகாரணம் என்ன என்பதைத் தோண்டித் துருவி, அந்த முடிச்சினை வெட்டி விடுவதற்கு - வழியில் என்ன தடை?

சமூகநீதி எல்லா அரசுத் துறைகளில் குறிப்பாக, நிர்வாகத் துறை (Executive), சட்டமன்ற - நாடாளுமன்றத் துறை (Legislature), நீதித் துறை (Judiciary) மூன்றிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதே- ஆட்சியாளர்கள், நீதிபதிகள் (குடியரசுத் தலைவர் தொடங்கி) அனைவரும் எடுத்துக் கொள்ளும் அரசியலமைப்புச் சட்டப்படியான பதவிப் பிரமாண உறுதி மொழி! - தத்துவம்.

ஆனால் இது இத்துறைகளில் முழுமையாக அல்லது பெரும்பான்மையாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்ற கேள்விக்கு பதிலாக, ஏமாற்றமே மிஞ்சுகிறது!

நீதிபதிகள் நியமனங்களில், ஆட்சியாளர் கொலிஜியத்தின் பரிந்துரையை ஏற்பதில் தாமதம் ஏன்?

தங்களது கொள்கைச் சார்புள்ளவர்கள் - தக்க வகையில் அடையாளம் காணப்பட்டு, தங்களுக்கு வேண்டியவர்களா என்பதை அறிந்து ஒன்றிய ஆளுமையாளர்கள் இறுதி இசைவு தருவதில் தாமதம் ஒருபுறம்.

மற்றொருபுறம், உயர்நீதிமன்றங்களின் மூத்த மூன்று நீதிபதிகள்தான் கொலிஜியத்தின் பரிந்துரைக் குழுவினர்.

இவர்களில் தலைமை நீதிபதி ஒருவர்; மற்றவர்கள் பணிமூப்பு அடிப்படையில் இரண்டு மூத்த நீதிபதிகள்.

இவர்களில் சமூகநீதி உணர்வாளர்கள் இடம் பெற்று விட்டால் - சீர்கேடுகளுக்கு அவர் ஒத்துப் போக மாட்டார்கள் என்று உணர்ந்து, சமூகநீதிக்கு எதிராக உள்ள ஆதிக்கவாதிகள் ஒரு தந்திர நடைமுறையை உயர் அமைப்புகளின் ஒத்துழைப்போடு கையாளுகிறார்கள் என்பது கண்கூடு.

இதில் உயர்நீதிமன்ற அல்லது உச்சநீதிமன்ற கொலிஜியத்தில் இடம்பெறத்தக்க சமூகநீதியாளர் இருந்தால் அவர் பதவி ஓய்வு பெறும் வரையில் தலைமை நீதிபதி பதவி அவருக்கு வராது. ஒன்று கிடப்பில் போடுவது, இல்லையேல், அவர்களை மிகலாவகமாக மற்ற உயர்நீதிமன்றங்களுக்கு நீதிபதி பதவிக்கு மாறுதல் மூலம் அனுப்பி விடுவது!

இங்கே வரிசைப்படி சீனியர் - அங்கோ ஜூனியர் போல வரிசையில் பின்னுக்குத் தள்ளப்படும் விசித்திரம்!

இன்னும் சில உயர்ஜாதி நீதிபதிகளின் யுக்தி - தந்திரத்தால் - இங்கே சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதிபதி ஒருவர் மேலே உச்ச நீதிமன்றம் செல்ல வெகு நாள் ஆகும்! அதற்குள் ஓய்வு வயதும் வந்துவிடும்; அதற்காக பக்கத்து மாநில உயர்நீதிமன்றத்திலும் மாறுதல் பெற்று, உச்சநீதிமன்றத்தில் இடம் பெற்று - ஓய்வு பெற்றும் புதிய பதவிகளைப் பெற்று விடுவர்.

இவையெல்லாம் உயர் ஜாதியினரின் உத்திகளும், தந்திரமும் பிணைந்து மேலே அதிகாரத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறுவ தற்கு முன் உதாரணம்!

இவை போல கண்டறிவதற்கு முடியாத 'முகபடாம்' கள் பலப்பல!

பெண்களுக்கு வாய்ப்பு - பாலியல் நீதி என்ற கோரிக்கையை நிறைவேற்றும் பாவனையில் உயர் ஜாதிப் பெண்களையே வழக்குரைஞர்களிலிருந்து தேர்ந்தெடுத்து, சமூகநீதிக்கு இடந்தராத 'பாலியல் நீதி'யை நடைமுறைப்படுத்திக் காட்டும் விசித்திர சமூக அநீதி!

இவையெல்லாம் பற்றி மக்கள் மன்றத்தில் எந்த உள்நோக்குகளும் இன்றிப் பொது நோக்கோடும் - மக்கள் நல சமூகநீதி - உண்மையான பாலியல் நீதி உணர்வுடன் விளக்கிட பல முற்போக்குச் சுயநலம் துறந்த, துணிச்சல் நிறைந்த பொதுநலவாதிகள் தேவை!

உச்சநீதிமன்றமும், கொலிஜியமும் - அண்மைக் காலங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் பரிந்துரை செய்யவேண்டும் என்று வெளிப்படையாகக் கூறிடும் நிலை தோன்றியுள்ளது. நமது இயக்கமும், சில முற்போக்கு சிந்தனை வழக்குரைஞர்களும் மேற்கொண்ட பணியால் சிறிது சிறிது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனை ஒரு மக்கள் இயக்கமாகவே நடத்தி, சமூகநீதி, பாலியல் நீதிப்படியே இனி நிரப்பப்பட வேண்டிய நீதிபதிகள் நியமனம் அமைவதற்கு அனைத்து சமூகநீதியாளர்களும் ஓரணியில் திரண்டு, ஒரே குரலில் மக்கள் பெரு விருப்ப நியாயங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க, விழிப்புணர்வைத் தட்டியெழுப்புவதே ஒரே வழியாகும். உண்மை நீதி அங்கே கிடைக்க வேறுவழி ஏது?

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திணை குளம் ஊராட்சி திணைக்களம் கிராமத்தில் நேற்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இதில் கிராம பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் அதிகாரிகள் மற்றும் பரமக்குடி நகர் துணை செயலாளர் மும்மூர்த்தி, அறங்காவலர் வன்னி, மற்றும் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பரம ஏழைகளான! அதானி – அம்பானிக்கு

பல லட்சம் கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்துள்ளார் நமது பிரதமர்!

நெல்லையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை.அக்.12-

பாரதப் பிரதமர் மோடி தனது தாயார் மீது மிகுந்த பாசம் கொண்டவர்,ஏழைகளுக்கு இரக்கமாக இரு என அவரது தாயார் கூறியதாக பிரதமரே கூறியுள்ளார், அந்த தாய் சொல்லை தட்டாத பிள்ளையாக இந்த நாட்டில் உள்ள அதானி,அம்பானி போன்ற பரம ஏழைகளுக்கு பல லட்சம் கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்துள்ளார். என்றும் கரூர் விவகாரத்தில் எடுத்தோம் கவிழ்த்தோம் என எந்த பணியையும் செய்ய முடியாது. யாரையும் பழி தீர்க்கும் அவசியமும் கிடையாது. சிறப்பு புலனாய்வு குழு அறிக்கை அடிப்படையில் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என நெல்லையில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான கல்லூரி மாணவிகளுக்கான ஹாக்கி போட்டிகள் நெல்லை அண்ணா விளையாட்டு அரங்கில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டு துறையில் புரட்சி ஏற்பட்டுள்ளது. உலக அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்கள் தமிழகத்தில் இருப்பது பெருமை சேர்கிறது. விளையாட்டு என்பது ஒரு சாராருக்கானது கிடையாது.

தாமிரபரணி ஆறு சிறப்பாக தான் உள்ளது.தாமிரபரணி ஆற்றில் இருந்து குடிநீர் அனைத்து இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுவதுடன் விவசாயிகளுக்கும் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.தமிழக அரசு பொறுப்பேற்ற நான்காண்டு காலம் நல்ல மழைப்பொழிவும் உள்ளது. நல்லமழை பொழிவதால் நல்லாட்சியும் நடைபெறுகிறது.

தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்கு பணிகள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தொய்வில்லாமல் அரசு விரைவாக அந்த பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கல்வித்துறையில் காலிப் பணியிடங்கள் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர் ஒரு லட்சம் பணியிடங்கள் இருக்கும் இடத்தில் ஒன்பதாயிரம் பணியிடங்கள் காலியாக இருப்பது பெரியதாக கிடையாது. யாரையும் காலியானவுடன் புதிய நபர் பணியில் உடனடியாக சேர்க்க முடியாது. அதற்கான பல வழிமுறைகள் உள்ளது. பணியிடங்களை நிரப்புவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாணவர்களின் படிப்பு பாதிப்பு இல்லாத வகையில் அரசு ஆசிரியர்களை நியமித்து வருகிறது.

கல்லிடைக்குறிச்சி திம்மராஜபுரம் அருகே நதிநீர் இணைப்பு திட்டத்தின் குறுக்கே உள்ள பாலம் ஒன்றை இடிப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பது 100 சதவீதம் நியாயமான கோரிக்கை. விவசாயத்திற்கு பயன்படுத்தும் டிராக்டர், அறுவடை எந்திரம் செல்ல முடியாதபடி மாற்றுப்பாலம் தவறான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்பட்டுள்ளது.

போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த 3 மின்கம்பங்கள் உடனடியாக மாற்றப்பட்டுவிட்டன.புதிய பாலம் கட்டுவதற்காக நபார்டு வங்கி மூலம் ரூ.1 கோடியே 40 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து நடவடிக்கை எடுப்பதே இந்த அரசின் நோக்கம்.

நதிநீர் இணைப்பு திட்டம் குறித்து தெரியாமல் அ.தி.மு.க இன்பதுரை எம்.பி.பேசி வருகிறார்.கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை 10 ஆண்டுகள் கிடப்பில் போட்டது அவர்கள்தான்.இந்தத் திட்டம் எப்படி செயல்படுகிறது, எங்கிருந்து தண்ணீர் எடுக்கப்படு கிறது,எந்தத் தண்ணீர் எடுக்கப்படு கிறது என்பதை முதலில் அவர் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். மணிமுத்தாறு, பாபநாசம் அணைகள் நிரம்பி, தாமிரபரணியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீணாகக் கடலில் கலக்கும் உபரி நீரை மட்டுமே எடுத்து நாங்குநேரி,இராதாபுரம், சாத்தான்குளம் போன்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் மகத்தான திட்டம் இது.இதைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

கரூர் விவகாரத்தில் யாரையும் பழி தீர்க்க முடியாது பழி தீர்க்க வேண்டிய அவசியமும் கிடையாது. சட்டம் சொல்வதையும் சிறப்பு புலனாய்வு குழு சொல்வதையும் வைத்து வழக்கு பதிவு செய்ய முடியும் ஒரு நபர் ஆணையம் மூலம் தகவல்களை தெரிந்து கொள்ளலாம். அவசர கோலத்தில் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். பாரதப் பிரதமர் தனது தாயார் மீது மிகுந்த பாசம் கொண்டவர். 'ஏழைகளுக்கு இரக்கமாக இரு' என்று அவரது தாயார் கூறியதாக அவரே சொல்லியிருக்கிறார்.அந்தத் தாய் சொல்லைத் தட்டாத பிள்ளையாக, இந்த நாட்டில் உள்ள அதானி, அம்பானி போன்ற 'பரம ஏழை'களுக்கு பல லட்சம் கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்திருக் கிறார்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவுக்கு தெரிவித்தார்.

விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,தலைக்காட்டுபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் பார்வையிட்டு வேளாண்மைத் துறை சார்பில் விதைப்பைகள்,தார்ப்பாய் மற்றும் மருத்துவத் துறை சார்பில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார்.உடன் ஒன்றிய செயலாளர்அன்புராஜன்,மற்றும் கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ.சு. மணி

அக்டோபர் 12 (1962)

சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்

மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'கொள்கைக் குன்று' எனப் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.